எடுத்து அனுப்பவும். அல்லது Principal, VHNSN College, Virudhunagar (Tamilnad Mercantile Bank) கணக்கு எண். 004 1000 50 304044 (IFSC Code TMBL0000004) இல் பணத்தைச் செலுத்தலாம். கட்டணத்தை வங்கிக் கணக்கில் பணமாகச் செலுத்துபவர்கள் **ரசீதின் நகலைக் கட்டுரையுடன்** கண்டிப்பாக அனுப்பவும்.

கருத்தரங்க நாளில் கலந்து கொள்ள இயலாதவர்கள் தங்களது ஆய்வுக் கோவையைத் தூதஞ்சலில் பெற கட்டணத் தொகையுடன் கூடுதலாக ரூ.150/– செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். **01.08.2018, புதன்கிழமைக்குள்** பெறப்படும் ஆய்வுக்கட்டுரைகள் மட்டுமே கருத்தரங்க ஆய்வுக் கோவையில் இடம் பெறும்.

ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், மொழி மற்றும் இலக்கிய ஆர்வலர்களிடம் இருந்து ஆய்வுக் கட்டுரையையும் ஒத்துழைப்பையும் வரவேற்கிறோம்.

## கருத்தரங்க அமைப்பாளர்கள்

தலைவர்
முனைவர் **பா. சுந்தரபாண்டியன்** அவர்கள்
கல்லூரி முதல்வர்

---

துணைத் தலைவர்
முனைவர் **N. அசோக்குமார்** அவர்கள்
இயக்குநர்

---

செயலர்
முனைவர் **கா. ஸ்ரீதர்** அவர்கள்
முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர்

## கருத்தரங்க உறுப்பினர்கள்

முனைவர் **செ. சாந்தி**
பேரா **சோ. ஹரிபாண்டிராஜன்**
முனைவர் **வீ.ச. அசோக்குமார்**
பேரா **சி. அம்சவள்ளி**
முனைவர் **சு. தங்கமாரி**
முனைவர் **செ. துர்காதேவி**
பேரா **இரா. அன்னலட்சுமி**

## தமிழ் இலக்கிய மரபில் கலகக் குரல்கள்

### பதிவுப் படிவம்

பெயர் :

பணியிடம் / பயிலும் நிறுவன முகவரி :

இல்ல முகவரி :

அலைபேசி எண் :

கட்டுரைத் தலைப்பு :

தொகை :

வங்கியின் பெயர் :

வரைவோலை எண் :

இடம் :

நாள் : கையொப்பம்

---

(இந்தப் படிவத்தை நகல் எடுத்தும் பயன்படுத்தலாம்)

**கட்டுரை மற்றும் வரைவோலையை அனுப்ப வேண்டிய முகவரி**

முனைவர் **சு. தங்கமாரி**
உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை,
வி.இ.நா.செ.நா. கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்
அலைபேசி – 98 94 10 21 30
மின்னஞ்சல் – pgtamil@vhnsnc.edu.in

Estd : 1947

# வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி)

(தேசிய தர மறுமதிப்பீட்டில் "A" தரம் பெற்றது)
விருதுநகர்.

முதுகலைத் தமிழ்த்துறை

# பன்னாட்டுக் கருத்தரங்கம்

## அறிவிப்பு மடல்

# தமிழ் இலக்கிய மரபில் கலகக் குரல்கள்

நாள்
**31.08.2018**
**வெள்ளிக்கிழமை**

நிகழிடம்

## வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி)

## தமிழ் இலக்கிய மரபில் கலகக் குரல்கள்

அன்புடையீர்,

வணக்கம். எமது வி.இ.நா. செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி) பழைய இராமநாதபுரம் மாவட்டத்தில் சமூக, பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களின் கல்வி மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு ராவ் பகதூர் **M.S.P. செந்திக்குமார நாடார்** அவர்களின் பெருமுயற்சியில் **11.08.1947,** திங்கட்கிழமையன்று தொடங்கப்பட்டதாகும். இக்கல்லூரி இடைநிலை வகுப்பு மற்றும் 2 இளநிலைப் படிப்புடன் முதல் கல்வியாண்டில் அடி எடுத்து வைத்தது. தற்பொழுது 17 இளநிலைப் படிப்பு 15 முதுநிலைப் படிப்பு மற்றும் 10 துறைகளில் முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புடன் ஆல விருட்சமாய் வளர்ந்துள்ளது. இக்கல்லூரி மாணவர்களின் கற்றல், திறன் மேம்பாடு, பணி வாய்ப்பு மற்றும் துறை சார்ந்த ஆய்வுகள் போன்றவற்றின் அடிப்படையிலான இந்திய மனித வள மேம்பாட்டுத் துறையின் மதிப்பீட்டில் **அகில இந்திய அளவில் 51ஆவது** இடத்தைப் பெற்றுள்ளது.

எமது முதுகலைத் தமிழ்த்துறை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் நிதிநல்கையுடன் ஆண்டுதோறும் கருத்தரங்கம் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகிறது. மேலும் 2016–2017ஆம் கல்வியாண்டில் "**தமிழ் இலக்கியப் பதிவுகளில் உறவுகள்**" 2017–2018 ஆம் கல்வியாண்டில், "**தமிழ் இலக்கியங்களில் வழிபாடுகள்**" என்ற தலைப்புகளில் பன்னாட்டுக் கருத்தரங்குகளையும் நடத்தி உள்ளது. இக்கருத்தரங்கப் பின்னணியில் தங்களைப் போன்ற இலக்கிய ஆய்வாளர்கள் மற்றும் தமிழ் ஆர்வலர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக இருந்தது. முதுகலைத் தமிழ்த் துறையின் பதினைந்தாவது ஆண்டைக் கொண்டாடும் விதமாக வரும் ஆகஸ்ட் மாதம் "**தமிழ் இலக்கிய மரபில் கலகக் குரல்கள்**" என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது.

ஓர் இனத்தின் சமூக மற்றும் பண்பாட்டு வரலாறு குறித்த எழுதியலில் அவ்வினத்தினுடைய இலக்கியம், பொருளாதாரம், அறிவியல், கலையியல் என அத்துணைக் கூறுகளையும் கூர்ந்து நோக்க வேண்டியது இன்றியமையாததாகும். தமிழ் மொழியைப் பேச்சு மொழியாகக் கொண்ட தமிழினத்திற்குப் பாரம்பரியமும் வரலாற்றுப் பதிவுகளும் மிகுதியாக உள்ளன. இவ்வினத்தில் சமூக மாற்றங்களுக்கான நிகழ்வுகள் காலந்தோறும் நிகழ்ந்து வந்திருக்கின்றன; வருகின்றன.

சங்க காலம் என்று சுட்டப்படுகின்ற காலகட்டத்தில் இனக்குழுச் சமூகத்திற்கும் நிலவுடைமைச் சமூகத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் (கலகங்கள்) சங்கப் பாடல்களில் இடம்பெற்றிருப்பதைக் காண முடியும். அதே போன்று நீதி இலக்கியங்கள் அக்கால வேளாளரின் கலகக் குரலையும் காப்பிய இலக்கியங்கள் அக்கால வணிகரின் கலகக் குரலையும் பக்தி இலக்கியங்கள் அக்காலச் சமயம் சார்ந்த கலகக் குரலையும் பதிவு செய்துள்ளன. அன்று முதல் இன்று வரை மரபை உடைத்தல், மரபு மீறல் என்பது பல்வேறு வடிவில் கலகக் குரல்களாக வெளிப்பட்டு வருகின்றன. நவீன இலக்கிய உருவத்திலும்கூட மரபு மீறல் கலகமாக வெளிப்படுவதைக் காணலாம்.

தொடக்க காலத்தில் இன அடிப்படையில் வெளிப்பட்ட கலகக் குரல்கள் இன்று பெண்ணியம், தலித்தியம், மள்ளரியம், மதம் போன்றவை சார்ந்த கலகக் குரல்களாக மாற்றம் பெற்றுள்ளன. இன்றைய கால கட்டத்தில் அடிப்படைத் தேவைகளைக்கூடப் போராடிப் பெறும் சூழலே உள்ளது. அதனால் போராட்டங்களும் எதிர்ப்புக் குரல்களுமே வாழ்க்கைக் களமாகிவிட்ட சூழலில் "தமிழ் இலக்கிய மரபில் கலகக் குரல்கள்" குறித்த ஆய்வு ஆட்சியாளர்கள் மற்றும் மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற நோக்கில் இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பட உள்ளது.

## ஆய்வுக்கான களங்கள்

1) அரசர்களின் கலகக் குரல்கள்
2) புலவர்களின் கலகக் குரல்கள்
3) அறம் சார் கலகக் குரல்கள்
4) சமயங்களில் கலகக் குரல்கள் (சைவ, வைணவ, சமணம், பௌத்தம்)
5) சித்தர்களின் கலகக் குரல்கள்
6) பெண்ணியம் சார் கலகக் குரல்கள்
7) சுதந்திரம் சார் கலகக் குரல்கள்
8) பொதுவுடமை சார் கலகக் குரல்கள்
9) எல்லைப் போராட்டக் கலகக் குரல்கள்
10) சாதியம் சார்ந்த கலகக் குரல்கள்
11) பாலியல் சார் கலகக் குரல்கள்
12) இலக்கிய வடிவம் சார் கலகக் குரல்கள்
13) விவசாயிகளின் கலகக் குரல்கள்
14) சுற்றுச்சூழல் சார் கலகக் குரல்கள்
15) நாட்டார் கதைப்பாடல்களில் கலகக் குரல்கள்
16) சமூக ஊடகங்கள் வாயிலான கலகக் குரல்கள்
17) குடும்ப உறவுகளில் கலகக் குரல்கள்
18) கல்வி சார் கலகக் குரல்கள்
19) பணியிடம் சார்ந்த கலகக் குரல்கள்
20) அரசியல் சார்ந்த கலகக் குரல்கள்
21) இனம் சார்ந்த கலகக் குரல்கள்
22) மொழி சார்ந்த கலகக் குரல்கள்

## கட்டுரையும் கட்டணமும்

கட்டுரை A4 தாளில் பாமினி எழுத்துருவில் **ஐந்து பக்கங்களுக்கு மிகாமல்** அமைய வேண்டும். கட்டுரையை மின்னஞ்சலிலோ குறுந்தகட்டிலோ (CD) வழங்க வேண்டுகிறோம்.

ஆய்வுக் கட்டுரைகள் அனைத்தும் ISBN எண்ணுடன் நூலாக்கம் செய்யப் பெற்று கருத்தரங்க நாளிலேயே வழங்கப்படும்.

**பேராசிரியர்கள் ரூ. 650/-**

**ஆய்வாளர்கள் ரூ. 450/-**

கட்டுரைக்குரிய கட்டணத்தை Principal, VHNSN College, Virudhunagar என்ற பெயரில் விருதுநகரில் மாற்றத்தக்க வரைவோலையாக (DD)